ஆதி மார்க்க னீதி மொழி

December 2024

இதழ் 41 – டிசம்பர் மாதம் 2024 வெளியீடு

© AMNA Trust, Chennai

மூலமந்நிரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்ஙோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

மகாசங்ஙல்ப மந்நிரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!

Copyright © AMNA Trust, Chennai

குருபிரான் அவர்களின் முன்னுரை

ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே, ஆதி மார்க்க னீதி மொழி மின்னணு சஞ்சிகை நாற்பத்தி ஒன்றாவது இதழாக 13 அவை மற்றும் 3 இசை வகுப்பு நிகழ்வுடன் மாறா மெய் மணத்துடன் உங்கள் முன் விரிந்து மணம் கமழ்கிறது. யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என பெரியோர்கள் அருளிய படி, மாறாத நெடுங்கால துன்பம் நீக்கி நித்திய இன்பத்தில் ஆக்கி வைக்கும் செயல் பொதிந்த வாசகங்களுடன் வருவதே இம்மின்னணு சஞ்சிகை.

எமனணுகா சத்திய பரிசுத்த வான்களின் சபையில் எமன் கைவசப்பட்டு பிண நாற்ற தீட்டுக்குரிய நரர் நிலை நிற்காமல் போவதை மாற்றி மெய்வழியின் அடிநாதமாகவும் சர்வ மதங்களின் அடிநாதமாகவும் விளங்கும் மறலி கை தீண்டாமை எனும் செயலில் ஆக்குவதே இந்த அவையின் ஒரே நோக்கம்.

மனித மனதுள் மறைந்திருக்கும் மறலி எனும் எமனின் செயலால் மனிதன் சென்றடையும் நரகத்தை விலக்கும் செயலே மறலி கை தீண்டாமை. இதனை அடிநாதமாக வைத்தே வாரந்தோறும் மற்றும் சிறப்பு அவையாகவும் நடைபெறும் ஆதி மார்க்க னீதி அவையின் அத்தனை நிகழ்வுகளும் உள்ளன.

கிரிகோரி நாட்காட்டியின் பிரகாரம் வரும் ஜனவரி மாதம் புது வருடம் 2025 ஆக இருப்பினும், உலகம் முழுவதும் ஒளி தரும் ஒரே சூரியன், மேஷ ராசியில் பிரவேசிக்கும் சித்திரை மாதமே வருடத்தின் முதல் நாள் என்பதை மெய்ஞானம் பெற்ற மக்களே அறிவர். ராசி மற்றும் நட்சத்திர பாத நிலைகளும் சந்திர சூரியனின் இயக்கமும் உயிரின் இயக்கமாக ஜீவனின் ரகசியமாக இருப்பதை மெய்ப்பால் எனும் ஞானப்பால் அருந்திய மக்களே அறிவர். அவர்களின் சிவானுபவ வெளிப்பாடே இம்மின்னணு சஞ்சிகை. சந்திர சூரியனின் கீழிருக்கும் இன்னில உலகில் வாழும் யாவரும் காலன் கைவசப்பட்ட பிண நாற்ற தீட்டுக்குரிய நரரே. சந்திரனும் சூரியனும் கடந்த இடமாகிய மறலியின் கை தீண்டாத இடத்தில் மக்களை குடியேற்றி வாழச் செய்யும் ஒரு அரும்பெரும் செயலே இம் மெய்ஞான ஒருருளை தேவரதத்தை ஓட்டிச் செல்லும் பெரியோர்களின் பணியாகும்.

கர்த்தாதி கர்த்தர் பிரம்மோதய மெய்வழி சாலை ஆண்டவர்களின் திருநோக்கும், அவர்களின் அடியொட்டி வந்த மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்களின் திரு நோக்கும், மெய்ஞான பாதையில் பயணிக்கும் மக்கள் யாவரும் பிறவாமை பெற வேண்டும் என்பதே. அரும்பெரும் செயல் தாங்கி வரும் இச்சஞ்சிகையை பார்த்து படித்து உணர்ந்த மக்கள் அதன்படி நடந்து வாழ

Copyright © AMNA Trust, Chennai

வேண்டும் என்றே மூல மந்திரம், பாத பூஜை, மகா சங்கல்ப மந்திரம். இவற்றை செயலாக அடி நாதமாக கொண்டுள்ளது ஆதி மார்க்க னீதி அவை. சீர் சிறப்புடன், மறலி கை தீண்டா அரும்பெரும் செயலை உயிர் நாடியாகக் கொண்டு நடக்கும் இந்த அவையின் அத்தனை நிகழ்வும் பொதிந்துள்ள இம் மின்னணு சஞ்சிகையை பார்த்து படிக்கும் மக்கள் யாவரும் நித்திய நற்பலன் பெற, எல்லாம் வல்ல பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஆசீர் பாதத்தினை வேண்டி வணங்கி வாழ்த்துகிறேன்.

நமஸ்காரம்.

சாலை ரவி

நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை

Copyright © AMNA Trust, Chennai

யோக்கியன் என்று சொல்லப்பெறுகிற ஒரு வியாபாரியையும், போக்கிரி என்று சொல்லப்பட்ட ஒரு கொலை பாதகனையும் மெய்யளவில் எடுத்துக்கொண்டால், பின்னவன் பிரம்ம னிஷ்டன் ஆகும்போது, முன்னவன் யோக்கியன் என்ற எல்லைக்கு வந்நிருப்பான். அந்த வியாபாரி, தன்னறிவிற் சாய்ந்நவனாகவே இந்த மெய்யை ஒட்டிப் பையப்பைய ஏறுவான். ஆனால் போக்கிரியோ, முரட்டுத்தனமாக முழு வேகத்தோடு மெய்யில் பாய்வான்.

உன்னைப்போலத் தேகியாக வந்து, பரத்தினுடைய லக்ஷணமாகிய சாகாக்கல்வி என்ற தெய்வீகக் கல்வியைக் கற்று தேர்ந்து, அதோடு இகத்தின் லக்ஷணத்தையும் இரண்டு மடங்கு கற்று வந்நுள்ளவர்களே, உனக்கு ஜீவ வழிபாடாகிய னேர் வழியைக்காட்டிச் சிவலோக பதவியை உன் தலையில் சூட்டுபவர்கள். அதற்குக் கைம்மாறாக னீ ஒரு ராஜாங்நத்தையே அவர்களுக்குக் காணிக்கையாகச் சமர்ப்பித்தாலும் அதுவும் அதற்குப் பத்தாது. ஏனெனில், அது அழியக் கூடியது. ஆனால் அவர்கள், உன்னிடத்தில் எதிர்பார்ப்பது அவர்கள்பால் உன் வஞ்ஞகமற்ற எதார்த்த ஒட்டுதலையே. அவர்களின் பேரிரக்கத்தை உன்மேல் சாய வைத்துக் கொள்ளுகிற செயல்தான் ஞானம்.

~ சாலை ஆண்டவர்கள்

Copyright © AMNA Trust, Chennai

ஆதி மார்க்க னீதி அவையின் 2024 நவம்பர் மாதம் அவை நிகழ்வுகள் – 2024 டிசம்பர் மாதம் வெளியீடு

02-11-2024 ~ சனிக்கிழமை அவை ~ நாயகன் இல்லம் தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **பரவிரதாச்சாரி யென்றுமே சமயாச்சாரி னானென்றே...** என்ற ஐம்மணிப் பொதிகை பாடலுடன் அவை மலர்ந்தது.

குருபிரான் அருளமுதம்: பொற்கோல் கரந்தாங்கி ஆறுரென்னும் குருச் சேத்திரமாகிய திருவரங்நத் திருச் சுவர்ணத் தில்லை திருச் சிற்றம்பலத்திற்கு நம்மை ஏற்றி வைக்கும் ஒரு மொழியாம் குரு மொழியின் மூலமே ஐம்மணியாம் பஞ்ஞாட்சரத்தின் பெருநிலை வைப்பை அறிந்தடைய முடியும்.

எமபடரடிபடு கோடாயிதக்கூர் - திருவாக்கியம் 192 கைலாயத்திற்கு போக்குவரத்தாயுள்ள சிவராஜர்களின் மீது அதிக அன்புடனும் உரிமையுடனும் ஆண்டவர்கள் உரையாடுவார்கள் என்பதை, குருகுலவாசம் பயின்று திருவடி பெருமையை உணர்ந்த அடியவர்களால் மட்டுமே உணர முடியும்.

ஜீவசகோதரர் விஜயகுமார்: **பரிசுத்த வேதாகமம்: மத்தேயு அதிகாரம் - 6: 6** இறைவனிடத்தில் அனித்திய தூலத்திற்கான பொய்ப் பொருளும், அற்ப சுகமும் வேண்டி அலம்பாமல், நித்திய தூலத்திற்கான மெய்ப் பொருளும், அருளும் வேண்டி மன்றாடுவதே ஜெபம். கர்த்தராகிய குருபிரானின் அருள் கிட்டப்பெற்று, அசலான ஜெப அறை வீட்டினுள் பிரவேசித்து, ஒன்பது வாசல் உள் தாளிட்டு, மெய் வணக்கம் செய்பவர்களுக்கு அந்தரங்கம் எனும் அறிவு தேகத்தில் பிரகாசித்து கொண்டிருக்கும் பிதாவானவர் வெளிரங்கமாக பலனளிப்பார் என்பதையே இத்திருவசனம் கூறுகிறது.

ஜீவசகோதரி பானுமதி குமரேசன்: **அல் குரான் - அல்மூமினூன் அத்தியாயம் - 23 : 5** இறை தூதர்களை பின்பற்ற மக்களுக்கு விடும் அழைப்பே இவ் அத்தியாயத்தின் மையக் கருத்தாகும். வாழ்வின் இன்ப, துன்பங்களை அசையா இறை நம்பிக்கையுடன் சமமான மன நிலையில் அனுபவிக்கும் இறை நம்பிக்கை உள்ளோரே எதிலும் வெற்றி பெறுவர். மனதை சமநிலையில் ஆக்கும் உளவே மெய்த் தொழுகை. ஆசான் அருளால் அலைவுறும் மனதை, அசையாத பிரம்ம நிலைக்கு மாற்றிக் கொள்பவர்களே அல் குரானின் அகமிய இரகசியத்தை அறிந்த அல் மூமினோர் எனும் நம்பிக்கைக்குரிய முஸ்லீம்களாக வாழ்கிறார்கள்.

பூரணப் புதையல் ~ குருபிரான் அருளமுதம்:

புதையலான பெருந்தவக் குன்றிலிருக்கும் குறைவிலா நிறைவாகிய பூரணப் பொருளை பக்தர்களின் உள்ளத்தில் பதிப்பிக்கும் **பாரமார்த்தீக போத னா வசனமே பூரணப் புதையல்.** அணுவுக்கு அணுவாகவும், அண்ட பிரம்மாண்டமாகவும் அரசாட்சி புரிந்து கொண்டிருக்கும் ஆதிபிரானே அருட்குருவாக, காட்டானாக (காட்டுகின்ற குரு ஆணாக) வந்து, மயங்கும் நம் மனதை ஆற்றுப்படுத்தி, மயங்காதிருக்க மாபெரும் உளவாகிய மாசிலா நோன்பு அளித்து, மனக் கண்ணொளி வீசும் வசந்த நாட்டில் குடியேற்றி வைக்கிறார்கள்.

சாலை ஆண்டவர்கள் அருளிய **னாடி னின்று காட்டானை வாலைப் பற்றி, னலியாது மனமுறைக்க வெளியாம் வீடு** என்ற மெய்வழி னூல் திருப்பாடலின் படி, வாலறிவனாகிய குருபிரான் சொற்படி கேட்டு சற்றும் பிறழாது நடப்பவர்கள், காலன் அணுகா கங்குல் பகலற்ற எல்லையில் நிலையாக வாழ்ந்து நித்திய சூரியர்களாக நித்தமும் பிரகாசித்துக் கொண்டே இருக்கிறார்கள் என்ற அரும்பெரும் நிலைகளுடன் அவை இனிதே நிறைவானது.

Copyright © AMNA Trust, Chennai

03-11-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய, **சுத்த சைதன்யச் சுகந்நவான் கடலே...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

ஜீவசகோதரி தீபா கிரகதுரை: அழியாத ஆன்மாவை அறிய வைத்து மக்களைத் தேவர்களாக்கும் தடையற்ற முழு தீரத்தை உடையதே மெய்க்கல்வி என்பது சாலை ஆண்டவர்கள் திருவாக்கு. அழிவுக்கே வழி வகுக்கும் நம் மனதை அறிவாக மாற்றி நித்திய தேகத்தில் குடியேற்றி வைக்கும் ஓர் எதார்த்த தேவ குருவை தேடி அடைவதே நம் முதற் கடமையாகும்.

ஜீவசகோதரி அன்னலட்சுமி: கருப்பை கூடிக் கலந்து முக்திக்கு தடையாக இருக்கும் நம் வினையைத் தீர்ப்பது வித்தக வினாயகரான ஆசானின் அருளே. அவர்களின் ஒருதிரு தரிசனை நம் இருவினை போக்கி உள்ளக் கவலை பயம் இல்லாமல் ஆக்கும் என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

ஜீவசகோதரி அஞ்சனா: அறிவு வடிவாக வரும் ஆசானின் அருளால் மனம் அலையாமல் பாதுகாக்கும் அறச்செயல் செய்தே நம் நாமத்திற்குரிய அழியாத மெய்யை அறியவும், தன்னைத் தான் அறியும் திருத்தலத்தில் குடியேறி வாழவும் முடியும்.

ஜீவசகோதரி தீபா முருகேசன்: பல கோடியாக விரியும் நம் மனதின் எண்ணமே சைத்தான். அதனை சுல்தானாக மாற்ற ஆசான் அருளும் செயலே பிரம்மவித்தை.

ஜீவசகோதரி வசந்தி: குருபிரானின் திருவருளால் அறிவை அறிந்த பின்பே நம் அறியாமை அகன்று அடங்காத மனதை அடங்கச் செய்யும் அடக்கம் கை வரவாகும்.

ஜீவசகோதரர் புகழ்: அறியாமைக்குள் இருக்கும் அறிவை அறிய அருள் புரியும் ஆசானே நம் உருவமற்ற மனக் குரங்கை அடக்கும் உபாயம் அருளி, சர்வமும் தானாக விளங்கும் மெய்ப்பொருளை தரிசிக்கச் செய்கிறார்கள்.

ஜீவசகோதரர் காளிதாஸ்: ஐம்புல நுகர்வால் மாயக் கூத்தாடும் மனமே பிறவிச் சுழலின் காரணம். மாயப் பிறப்பறுக்கும் மன்னனாக வரும் குருவின் வாய்மை எனும் தூய ஞானச் சுடர்விளக்கே மாயக் கூத்தை எரித்து மனதற்ற பரிசுத்தத்தில் நம்மை ஆக்குகிறது.

ஜீவசகோதரர் சங்கர்: திருவின் உருவைக் காண்பதே தரிசனை. சிலந்தி வலையில் சிக்கிய அதன் உணவு போல் மனம் எனும் வலையில் சிக்கிய நம்மை மீட்டு, மீண்டும் பிறவாதிருக்க செய்யும் குருவின் செயலே நித்தியம். வாடாத தீபமான நம் சுயம் பிரகாசப் பொருளை அறியச்செய்யும் குருபிரானின் வாசக் கமல நடனமே யுகாந்த நாட்டுச் செல்வம். நந்தியாக வரும் அவர்களின் நாதமே நம் நாலுதேக இருப்பிடத்தின் திசை காட்டும் சூரியனாகும் என்ற பகிர்வுடனும், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

குருவே தெய்வம். குருவே தர்மம். குருவினிடத்து னிழல் போன்று னின்று, அவரது செயலுக்கெல்லாம் ஒத்துப்பழகி, வைராக்கிய சித்தனாக னிற்பதே தவம். குருவுக்கு மேலானது எதுவும் இல்லை. இதனை மும்முறை உனக்குச் சொல்லுகிறேன்.

~ குரு கீதை

Copyright © AMNA Trust, Chennai

09-11-2024 ~ சனிக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்தஆவி தெய்வத்தின் திருவடி போற்றி **கண்ணகன் ஆலம் ஆழ்த்தும்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

குருபிரான் அருளமுதம்:

மனுமுளை துவங்கிய காலம் முதல் அதனுள் குடியேறிய சாகாத்தலை எனும் மின்னல் கிரணமாகிய ஜீவதேகமே மெய்ப் பொருளாக அகப் பார்வை கொண்டு அறிகின்ற தன்னுலகமாக விளங்குகிறது. குருவருளால் அதனுள் ஆழ்ந்து பெறும் பேரின்பம், மெய்யறிந்த மக்களுக்கு இன்றும் செயலாக வாழ்க்கையாக உள்ளது.



கோடாயிதக்கூர் வாக்கியம் 193 - குருபிரான் அருளமுதம்:

பெரியோர்களின் னன்னாதமே சர்வ வேதங்களும் கூறும் இறை திருவடியாகும். அதுவே மக்களின் அறியாமை அகற்றி தத்துவ வடிவாகிய இறை பொருளை அறிய வைத்து அறிவுப் பிரகாசத்தில் ஆக்கி முக்தி வழி காட்டுகிறது. வந்த வேதமாகிய ஆசானின் நாதமே சமரசப் பொருளான ஐம்பொறி, அறுசுவை ஒளியும் இடம் யாவும் அறிய வைத்து, சாதி பேதம் தீர்த்து அமரர் ஆக்குகிறது.

ஜீவசகோதரர் விஜயகுமார்: **சத்தியவேதம் - மத்தேயு 7:14, 21:13, யோவான் - 10:9** *ஜீவனுக்கு செல்லும் வாசல் இடுக்கமான, நெருக்கமான வழியாக உள்ளது. என்னுடைய ஜெப வீட்டின் வாசல் நானே. என் வழியாய் உள்ளே பிரவேசிப்பவன் இரட்சிக்கப் பெறுவான்* கர்த்தராகிய மெய்க் குருவின் அருளால் ஞானத்தின் முதலான செவிவாசல் வழியாக நுழைந்து, நானெனும் ஜீவதேக ரகசியம் அறிந்தவனே பாவ இரட்சிப்பு பெறுகிறான். இருதயத்தில் விளங்கும் ஈசனாகிய பிதாவை பிரகாசமாகக் கண்டு மூச்சானது ஒரு நிலைபட நின்று வணங்கும் மெய்வணக்கமே ஜெபமாகும். மோட்சம் தரும் அவரவரின் சொந்த ஜெப வீடே ஐந்தெழுத்து மந்திரமாக உள்ளது.

பூரணப் புதையல் - குருபிரான் அருளமுதம்: அறிவெனும் அழியாத பூரணம் அறிந்த மக்கள் சத்திய வேதம் கூறும் ஜெபம் செய்வதின் ரகசியம் அறிவதுபோல், தலை கீழான கல்லால மரமெனும் பஞ்சாட்சர ரகசியம் அறிய குணம் பொறுத்த மனையாள் வாய்க்க வேண்டும். அப்படி தனக்கு வாய்க்காதால் பட்ட இன்னல்கள் அதிகம் என்பது ஆண்டவர்கள் திருவாக்கு. தனது குருவின் உத்திரவின்படி வெள்ளை ஆடை அணிவித்து ஷம்சு மாதை மணம் முடித்து, பல இன்னல்களின் நடுவே ஓருருளை தேவரதத்தை நடத்திய சரிதமே ஆண்டவர்கள் அருளிய ஆதி மான்மியம். அன்னாடு சென்று வரும் ஆசான் தயவால் தன்னுள் விளங்கும் தத்துவப் பொருளின் ரகசியம் அறிந்து, மெய் உணர்ந்த மக்களே அன்னாட்டிற்கான வித்தாக விளங்குவர் என்ற குருபிரானின் அருளமுதுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.

Copyright © AMNA Trust, Chennai

10-11-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

ஜீவசகோதரர் கௌதம்: இறைவன் வழங்கிய அமானிதமெனும் ஆறாம் அறிவை குருவருளால் அறிந்தே அவரவர் உள்ளத்துள் குறைவிலா னிறைவாக விளங்கும் நித்திய மெய்ப் பொருளைக் காண இயலும். நம் அறியாமை எனும் இருள் நீக்கும் குருவின் அருளமுத வர்ஷிப்பே மெய்க்கல்வி எனும் பிரகாசம். சர்வ வேதங்களும் பறை சாற்றும் தடையற்ற மெய்க்கல்வி பழகி தேற வேண்டிய ஒன்றாகும். ஒவ்வொரு மனுவும் தன்னையறிய, ஞானிகள் உண்டாக்கிய தத்துவ வடிவே கோவிலின் சிலை வடிவங்கள். தத்துவம் கடந்த தயாநிதிக் கடலாக வரும் வினை தீர்க்கும் வித்தகரான குருவே விநாயகர். அவரே நம் மனதால் மாறிக் கொண்டே இருக்கும் குணத்தை தன் மெய்ம்மண நாதத்தால் நிர்க்குணமாக மாற்றி மறுவிலாக் குகன் வாழும் மாசில்லா ஆலயத்தில் குடியேற்றுகிறார். **முறையான வணக்கம், மாசற்ற இரக்கம், வருங்கால தீர்க்கம் எனும் மந்திர ஸ்திரத்தை** னம் மனந்தனில் அழுத்தி அதற்கு உரியவனாக ஆக்குவது குருவின் பேரிரக்கமே.

ஜீவசகோதரர் சங்கர்: மும்மூலம் எனும் வினைகள் வென்ற முருகப் பெருமானே கந்தன், ஆறுமுகன், சுப்ரமணியன். குரு தன் இரக்கத்தால் சாத்வீக குணத்தில் நம்மைப் புகுத்தாட்டி நம் பலகோடி எண்ணங்களை சங்காரம் செய்யும் செயலே அசுர சங்காரம். சாலை ஆண்டவர்கள் பாடுபட்டு பலனாகப் பெற்று, நம் தலை செழிக்க பெருங்கருணை கொண்டு உரைத்த மெய் ஞானத்தின் பலனை நாமும் பாடுபட்டு செயலாக்கியே பெற முடியும். ஆர்வ சித்தம் உள்ளோரே தன் ஜீவ தரிசனம் கண்டு ஜென்ம சாபல்யம் பெறுவர். குரு அருளும் மெய்ம்மண கந்தமே கணங்களின் அதிபதியான கணபதியைக் கண்டு நம் வினை தீர்க்க உதவும். சர்வ சன்னதம் பெற்ற சாலை ஆண்டவர்கள் அருளிய அறம் செய்து, அனித்திய உடல் விட்டு அகமுகப் பயணம் செய்து அழிவிலா வாழ்வில் குடியேற்றும் செயலுள்ள இடமே ஆதி மார்க்க னீதி அவை. பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே னிறைவானது.

10-11-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **மாயக் கூத்தின் வகையறியாமல் யான்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

ஜீவசகோதரர் அஜய் கிருஷ்ணன்: மாயக் கூத்தாடும் நம் தூலத்தின் செயல்கள் யாவும் வினை சார்ந்ததே. அறிவை முன் வைத்து மனதற்று செய்யும் செயல்களுக்கு வினையில்லை. புலன் வழியே புறத்தில் அலையும் மனம் ஆசானின் நாதத்தால் அகம் திரும்புவதே புண்ணியம்.

ஜீவசகோதரர் பாண்டி: **உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்** என்ற சத்தியவேத வாக்கின் படியும், **நடுவு நின்றார்க்கு நமன் இல்லை** என திருமூலர் அருளிய படியும், நடுவறிந்து நடுவில் நிற்கும் பெரியோர்களே மூலமந்திரப் பொருளை திறந்து காட்டி அருள வல்லவர்கள்.

ஜீவசகோதரர் செல்வராஜ்: அவரவர் உயிரின் ரகசியமே மூலமந்திரம். வினை தீர்க்கும் குருவின் தரிசனமும் அவர்களின் அருள் வாக்குமே நம் அறியாமை அகற்றி அறிவு வழியில் நடக்கச் செய்கிறது.

Copyright © AMNA Trust, Chennai

ஜீவசகோதரர் திருமூர்த்தி: இறைவன் மனுவுக்கு வயது தந்ததின் பிரயோஜனம் மெய்ப்பால் அறியவே என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளபடி, மெய்ப்பால் அறிந்த மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.

ஜீவசகோதரர் கருப்பசாமி: பண்படுத்திய தரிசுநிலம் செழிப்பது போல், ஆசான் நம் குற்றெழுத்தை உற்றெழுத்தாக மாற்றி, பண்படுத்தி ஜீவப்பயிர் செழிக்கச் செய்கிறார்கள்.

ஜீவசகோதரர் மகாலிங்கம்: குருபிரான் தன் ஒரு சொல்லால் அரை நொடியில் நம் மலமகற்றும் வித்தையே பிரம்மவித்தை. ஆசானின் வாய்மையை நாதமாக உட்கொள்வது அவரவரின் அறிவு சார்ந்தும், பேதமாக விலக்குவது மனம் சார்ந்தும் உள்ளது. **திருவாளர் கனகசபைத் திருநடஞ்செய் தருள்வார்** என வள்ளலார் அருளியபடி தன் ஓசை கொண்ட நடனத்தால் நம் அறிவை ஒளிரச் செய்பவரே திருவாளர்.

ஜீவசகோதரர் கௌதம்: புலன் வழி செல்லாது அறிவு வழி சென்று அகமியத்தில் அனுபவிப்பதே பேரின்பம். அஞ்ஞானத்தை சங்காரம் செய்யும் ஆயுதமே இறை திரு சன்னதங்கள். தொண்டரின் இதயத்தில் வீற்றிருக்கும் ஆதி மூல ஆவியை அறிவதே தன்னை அறிதலாகும். அருண் மணியான ஆசானின் நாதமே நம் சிரத்தில் ஜீவித்திருக்கும் ஜீவனைக் கண்டு ஜென்மசாபல்யம் பெறச் செய்கிறது. சர்வத்தையும் அசையச் செய்யும் அசைவற்ற சைவப் பொருளான அக்கெனும் பிரம்மம் குடியிருக்கும் குருவின் திருமுகமே நம் இரு வினை தீர்த்து இறவாவரம் தந்து இறைவனுடன் இரண்டற கலக்கச் செய்கிறது. பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே னிறைவானது.

14-11-2024 ~ வியாழக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **வான வேதாந்நச் சஞ்ஞீவி – குரு வள்ளல் கொடுத்த வாசுகியின் சஞ்ஞீவி** என்ற பாடலுடன் அவை மலர்ந்தது.

குருபிரான் அருளமுதம்: செயலாக வரும் குருவின் திரு ஆலவாய்ச் சஞ்சீவியால் பெறுவதே ஆனந்தக் களிப்பு. சாகாக் கல்வியை செயலாகப் பழக்கித் தரும் அவையே ஆதி மார்க்க னீதி அவை. நீதியெனும் பொருளை குருவின் கருணையால் அறிந்து அறிவுத் தெளிவுடன் ஐயறிவை அறிவிக்கும் ஆறாம் அறிவை அறிந்தவனே மனு. மனுவின் தனிச் சீதனமான மனதை ஆசான் அருளால் அறிவாக மாற்றுவதே ஞானம்.

திருமெய்ஞ்ஞானக் கொரல் - வாக்கியம் எண்: 05 தொடர்ச்சி - குருபிரான் அருளமுதம்:
உடல் வளர்க்கும் உபாயம் அறிந்து உள்ளிருக்கும் உத்தமனைக் காண்பதே தன்னையறிதல். மனவழி சாராமல் பெரியோர்கள் அருளிய அறிவுவழி சார்ந்த செயலுடன் இருப்பதே மெய்வழி.

ஜீவசகோதரர் ரியாஸ்: **திருக்குர்ஆன்:** அல்குர்ஆனின் அன்னை எனும் அல் ஃபாத்திஹாவினை ஓதுவதே சிறந்த தொழுகை. சர்வ உலகின் எல்லாப் புகழும், றப்பாகிய அல்லாஹ் எனும் அவரவரின் ஜீவனுக்கே உரியதாகும். ஏதுமிலதாய் யாதுமுளதாய் சர்வமும் சிருஷ்டிக்கும் பரிபூரண மெய்ப்பொருளே அல்லாஹ். ஒரு மெய்ஞான குருபிரானே நம் ஜீவனின் எஜமான். ஆதி எனும் அருட்பெருஞ்ஜோதியே தனிப்பெரும் கருணையாக இருப்பதை அறிந்து குருவருளால் மெய்வழியை அடைவதே அல் ஃபாத்திஹா சூரா கூறும் நேர்வழி.

குருபிரான் அருளமுதம்: அல்லாவும் மலையப்ப சாமியும் ஒன்றே. பரமாத்மா, ஜீவாத்மா பற்றி கூறும் இவ்வேதம், ஜாதிபேதம் தீர்த்தசேதி அறிந்த ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களுக்கே உரிய ஜீவப்பரிசாகும்.

Copyright © AMNA Trust, Chennai

பூரணப்புதையல் - குருபிரான் அருளமுதம்: மனதின் எழுச்சியால் நால் வகை யோனி மூலம் நரனாகப் பிறந்து, குருவருளால் ஐந்தாம் யோனியில் மனுப் பிறப்பெடுத்தே தேவராக முடியும். செயலுள்ள திருவசனங்கள் உணர்த்தும் அகரப் பொருளே ஜீவனாக பஞ்சாட்சரமாக இருப்பதை அறிந்து, அதனுடன் இரண்டறக் கலப்பதே இறை நிலையாகும் என்ற குருபிரானின் அருளமுதுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

16-11-2024 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அண்ட பகிரண்டமெலாம் தொண்டரிதயத்தின் மனக்கண்ணாடி...** என்ற **இடப்பாக ஆசாரக் கண்ணி** பாடலுடன் அவை மலர்ந்தது.

குருபிரான் அருளமுதம்: அண்டத்திலுள்ள சர்வ படைப்புகளையும் பிரத்யட்சமாக காட்டக்கூடியதே பகிரண்டம். சிவராஜ பாட்டையின் வழிகூடி நடக்கும் தொண்டர் இதயத்தின் மனக் கண்ணாடிக்குள் காரணப் பொருளாக பிரகாசிப்பதே சுயம்பிரகாச ஜோதி சொரூபம். அண்டத்துக்கு ஒத்ததே பிண்டம் என அறிவிக்கும் அதுவே வஞ்சப் புலன் சதியிலிருந்து நம்மை மீட்டு எமன் கை சிக்காமல் பாதுகாத்து இறை திருவடி நிழலில் தஞ்சம் புகச் செய்கிறது.

எமபடரடிபடு கோடாயிதக்கூர் திருவாக்கியம் 194 - குருபிரான் அருளமுதம்:
சொர்க்கத்தின் பாதை இடுக்கமாகவும், நரகத்தின் பாதை விசாலமாகவும் இருப்பதறியாமல் மனம் போன போக்கில் சென்று மீளா நரகமெனும் அவஸ்தையில் மாட்டிக் கொள்ளும் மாந்தரை மீட்டு, சொர்க்கபதி வாழ்வில் குடியேற்றி வைப்பவரே மெய்க்குருபிரான்.

ஜீவசகோதரர் விஜயகுமார்: **சத்தியவேதம் - அப்போஸ்தலர் அதிகாரம்: 26 & 28**
சப்தத்துள் சதாசிவம் காட்டும் கருணை வடிவான குருபிரான், மனுவை நித்தியனாக படைத்தது ஆறாம் அறிவின் செயலை உணர்ந்து பிறவாமை எனும் கிடைத்தற்கரிய பெருவரத்தைப் பெறுவதற்கே. மனுவாகப் படைக்கப் பெற்ற பின்னும் செயல் சீரின்றி மன வழி செல்வோர் பிறவிப் பிணியில் சிக்கி துன்புறுகின்றனர் என்பதையே மேற்கூறிய திருவசனங்கள் உணர்த்துகிறது.

பூரணப் புதையல் - குருபிரான் அருளமுதம்: அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரமே பூரணப் புதையல். இதில் பொதிந்துள்ள செயலுள்ள வாசகங்களை பேரிரக்கம் கொண்டு குருபிரான் வழங்க, அதனை வஞ்சமிலா எதார்த்த உள்ளமுடன் சிரமேற் தாங்கிப் பெற்றவர்கள், தன் பொய் வஞ்ஞகங்கள் நீங்கி ஆசான் அருளிய சாதகத்தில் நிலைத்து நிற்பர். மாற்றாக நடப்போர் மரணக் குழியில் விழுவது திண்ணம். ஆதலால் மயங்காத மனதுடன் மதிவடிவாக வரும் மன்னவரின் மலர்ப் பாதம் பணிந்து மரணமிலாப் பெருவாழ்வு வாழ்வோமாக. பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

குரு மந்நிரம் எவன் னாவிலிருக்கின்றதோ அவனுக்கு யாவும் சித்திக்கின்றன. அஷ்ட பாசங்ஙளும் ஒழிவதற்குக் குருகீதையாகிய ஜலத்தில் தத்துவ ஞானி எப்போதும் ஸ்னானம் செய்கின்றான்.

~ குரு கீதை

Copyright © AMNA Trust, Chennai

17-11-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
தொகுப்பு: ஸ்ரீ. வாசுதேவன்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் பணிந்து அவை மலர்ந்தது.

ஜீவசகோதரர் கௌதம்: அறிவு, குணங்கள் இவற்றைப் பற்றியே வந்த வேதங்கள் யாவும் கூறுகின்றன. அறிவைக் கொண்டே குணங்களை அறிய முடியும். ஆதி மான்மியத்தில் சாலை ஆண்டவர்கள் அருளிய படி, மாண்ட மனு அனைத்தும் மண்ணில் இருந்து எழுப்பும் தேவ ரகசியச் செயலை எல்லா மத வேதங்களும் கூறுகின்றன. ஒவ்வொரு மூச்சிலும் மரணிக்கும் நம்மை அதிலிருந்து மீட்பவரே வந்த வேதமாகிய ஆசான். அனித்திய தேகத்தில் மாண்டு கிடக்கும் மனுவை எழுப்ப வல்லவரே கர்த்தராகிய குருபிரான். பிறப்பு இறப்பின் ரகசியம் அறிந்தவனே ஞானி. மாறாத மறையோன் சொரூபமாக, அழியாத ஆன்றோன் சொரூபமாக, என்றும் இருக்க வந்த ஈசன் சொரூபமாக, அழியாது இருப்பவனே மனு என்பது சாலை ஆண்டவர்களின் திருவாக்கு. குருவின் திருமுகத்தில் மறுபிறப்பு பிறவாதவனுக்கு தேவனின் ராஜ்ஜியத்தில் இடமில்லை என்பது வேதத் தீர்ப்பு. நித்தியரிடத்தில் கற்ற மூமின்களின் தேகம் மண் தீண்டாது. அவர்களுக்கே மறை மெய்யாகும். கூரான குருவருளை கூர்ந்து போற்றியே நம் வீண்நாளை வாழ் நாளாக்க முடியும்.

ஜீவசகோதரர் சங்கர்: பஞ்சபூத கலப்பினால் உருவான இத்தேகம் அழியும் காலத்தில், அழியாத நினைவெனும் ஆகாயத்தின் வினைக்கேற்ப பிறப்பும் பிறவாமையும் அமைகிறது. மண்ணாகிய இத் தேகத்தின் மீது இச்சை இல்லாதவரே மூமின். குருபிரான் தனது பரிசுத்த ஆவியால் நர தேகத்தில் மாண்டு கிடக்கும் மனுவை எழுப்பி அழியா தேகத்தில் குடியேற்றி மரணமிலாப் பெருவாழ்வு வாழச் செய்கிறார்கள். கற்பகத் தருவாக வந்து, கேட்டதும் கேளாததும் தருகின்ற ஆசானே இன்சானின் இதயத்தில் விளங்கும் ஈசன். பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

21-11-2024 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **முன்னுரு தங்நுரசிக்குல மாமணி...** எனும் **தன்னிலக்கணம் உணர்த்தல்** பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

குருபிரான் அருளமுதம்:

பூமியை இயக்கும் காலமும், அதன் அதிபதியான காலனையும் கடந்தே காலம் கடந்த அரூப வடிவில் இருக்கும் மெய்ப்பொருளை அடைய முடியும். சர்வத்தையும் உற்பவித்து மீண்டும் தன்னில் அடங்கச் செய்யும் அதுவே பிரம்மம். சலனமற்ற பூரண நிலையில் வேத சாட்சியுடன் வேதவழி வாழும் பாக்கியம் பெற்றவர்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.

திருமெய்ஞ்ஞானக் கொரல் - திருவாக்கியம் 5ன் தொடர்ச்சி - குருபிரான் அருளமுதம்: அருந்தவம் புரிந்து சாலை ஆண்டவர்கள், மனுவின் பவத் தொடக்கை வெல்ல அருளியதே மெய்க் கல்வி. இதனை குருவருளால் பழகி, மெய் உணர்வு பெற்றே அவரவருள் விளங்கும் பேசரும் பெரும் பொருளான விஸ்வரூபத்தைக் காணவும், விஸ்வநாதத்தைக் கேட்கவும் முடியும்.

Copyright © AMNA Trust, Chennai

பூரணப்புதையல் - குருபிரான் அருளமுதம்:

கோடானு கோடியெனும் அமானிதம் விளங்கும் இடமே எட்டிரண்டும் பத்தான இடம். தன்னிலக்கணம் உணர்த்தும் செயலாக பூரணப் புதையல் பாடலில் சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள இதனை செயலாக நிரூபிப்பதே ஆதி மார்க்க னீதி அவை. மூக்குக்கு வெளியே மூச்சு ஓடா தவம் கொண்டு, முக்குணமற்ற நிர்க்குணங் குடியராக வந்த நிர்மலன், மார்க்க னாதப் பெருமான் அருளிய கலைகள் பதினாறும் பூரணமே. செயலுக்கே வராத ஒன்றை செயலாக்கி, அறை மறைவாய் இருக்கும் அர் ரகசியத்தை அறியச்செய்து, மரணமிலாப் பெருவாழ்வில் குடியேற்றும் செயலுள்ள பாடலே பூரணப் புதையல்.

ஐம்பொறி அறுசுவை இவற்றின் காரணப் பொருளே, ஏதும் இலதாய் யாதும் உளதாய் இருக்கும் ஏகாட்சாரம். தெய்வீக சாம்ராஜ்யத்துள் நுழைய உயிரினும் மேலான ஒழுக்கம் மனுவுக்கு மிக அவசியம். இதனை அருளும் மெய்க் குருவின் போதமே வேதம். சப்த சப்தாதிய சாயலும், முச்சுடராக விளங்கும் ஜீவனின் ரகசியம் அறியும் ஒரே குலமான சுக்குலத்துக்கு உரிய குலமே மனுக்குலம். மும்மூர்த்தி கரம் ஒருங்கே திரண்டு காலத்தை துறவு பூண்டு ஆறுமுகத்தின் ரகசியமும் அறிந்த அரோகரம் எனும் அக்கரமே ஆசான். கொடி முனையாம் மலர்க்கை கொண்டு மனுவை நீதியெனும் பொருள் ஆன நித்தியனாக்கும் நித்தியனே குருபிரான், என்ற அருளமுதுடனும், சரவண நந்தவன வளாகத்தில் அமையவுள்ள ஸ்ரீ ஆதிசக்தி வாலைத் தாய் அம்மன் ஆலய கும்பாபிஷேகப் பகிர்வுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

23-11-2024 ~ சனிக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் பணிந்து, மணிவாசகப் பிரான் அருளிய அச்சோப்பதிகம் பாடலுடன் அவை மலர்ந்தது.

குருபிரான் அருளமுதம்:

நாம் கணந் தோறும் மரணிப்பதும், அனித்திய தேகம் நாமல்ல என்பதும் அறிவு வடிவான குருவின் அருளால் தான் அறிய முடியும். ஏழாம் பிறப்புடலம் எடுக்கவும், எழுவகை தோற்றத்தின் ரகசியம் அறியவும், அமரத்துவம் பெற்று அமானிதக் கடன் தீர்க்கவும், குருவின் இரக்கம் நிச்சயம் வேண்டும். சாமுன் சாகப் பழகும் சன்மார்க்க செயல் பழகித் தேற, சுகந்த மலராக வாடாத தீபமாக மெய்மணமாக வரும் குருவின் வாய்மையே துணை.

கோடாயிதக்கூர் திருவாக்கியம் 195 - குருபிரான் அருளமுதம்: இறைவனின் கையேடான விதியெழுத்தை மாற்றி மதியெழுத்தைப் பதிப்பித்து எமபடரைக் கடக்கும் அரும் பெரும் செயலுக்கே வேதமும், அதன் கர்த்தர்களும் வந்தனர். யாவர்க்கும் காலமே விதியாக கதியாக உள்ளது. வினையும் விதியுமே பிறப்பு இறப்பின் காரணம். பிறந்த குழந்தையின் மூச்சும் சப்தமுமே ஜீவன் குடியேறிய அடையாளம். எழுதாத எழுத்தான னற்றாளை தரிசனையாக நம்மை காணச் செய்வதே உபதேசமாகும். மனம் அலைவின்றி காரண தேகம் கவனத்துடன் சேர்ந்து உணர்வுகார ரகிதமாகும் போதே அவரவர் நாமத்திற்குரிய பொருளை தரிசிக்க முடியும். சாலை ஆண்டவர்கள் சென்னெறிச் சீர் உழவு கோல் கொண்டு, தன்னை நாடி வந்த மாணாக்கன் தலையில் மெய்யை ஏற்றிய சம்பவமே தீர்க்கதரிசனம்.

Copyright © AMNA Trust, Chennai

ஜீவசகோதரர் விஜயகுமார்: **சத்தியவேதம்: திமோத்தி 2:1,6 ஹீப்ரு: 1:3,5**

இயேசு கிறிஸ்து உண்டாக்கிய ஜீவனைப் பற்றிய வாக்குத் தத்தத்தின் படி உனக்கு உண்டான தேவ வரத்தை நீ அனல் மூட்டி எழுப்ப நினைவூட்டுகிறேன், நம் பாவங்களை சுத்திகரித்து மகத்துவம் ஆனவரின் வலது பாரிசத்திலே அமர்ந்தார், நான் அவரின் பிதாவாகவும் அவர் எனது குமாரனாகவும் இருப்பார்.

தேவ சித்தத்தால் ஜீவன் குறித்த சுவிசேஷ நற்செய்திகளை கர்த்தர் வாக்குத் தத்தமாக அருள்கிறார். கர்த்தர் தன் உள்ளமாகிய கையை மனிதன் மீது வைத்ததால் உண்டான அமானிதமெனும் தனிச்சீதனமே தேவ வரம். சக்தியின் வடிவே வலது பாரிசம். தோற்றம் இல்லாமை எனும் அரூப வடிவத்தில் இருப்பது பிதாவாகவும், தோற்றத்தில் உள்ளவர் குமாரனாகவும் இருக்கிறார்.

குருபிரான் அருளமுதம்: முக்குணத்துடன் வாழும் ஒன்று முதல் ஐயறிவு கடந்து, தனிச் சீதனமாக மனிதனுக்கு வழங்கப் பெற்ற ஆறாவது அறிவு, சுக வாழ்வு நல்கும் சுகந்த மலர் இருக்கும் மனமெனும் தூய கண்ணாடி மாளிகையில் அசுத்தம் சேர்க்காமல் னீதியில் வாழ்ந்து னித்தியத்தைக் கைக் கொள்வதற்கே.

ஜீவசகோதரர் சிரஞ்ஜீவி - **திருவருட்பா: தகர மெய்ஞ்ஞானத் தனிப் பெருவெளி எனும் அகரனிலைப்பதி அருட்பெருஞ்ஜோதி** தகர விளக்கில் எரியும் ஐம்பூதத்தில் ஒன்றான நெருப்பை ஜோதியாக வணங்கும் நகலின் நிஜம் யாதெனில், குருவருளால் சுடாத தீயாக, புகையாத கனலாக உள்ள அறிவெனும் ஆத்ம ஜோதியை தரிசித்து, எமனின் வல்லபத்தை தகரச் செய்யும் அகமியச் செயலேயாகும். எதற்கும் முதற் பொருளான பஞ்சாட்சரப் பொருளை அறிவதே தன்னை அறிதலாகும்.

குருபிரான் அருளமுதம்: வள்ளலார் அருளிய நாத மருந்தே பிறப்பும் இறப்பும் நீக்கும் அருமருந்து. மனிதன் ஒழுக்க நெறியில் வாழ்ந்து இறை நிலை பெற வேண்டியதை உணர்த்தவே ஞானிகள் கோவில்களை உண்டாக்கினர்.

பூரணப் புதையல் - தன்னிலக்கண முணர்த்தல் - குருபிரான் அருளமுதம்:

தன்னிலை உணரும் போதே பூரணத்தின் ரகசியம் புரியும். சமரசமும் சமத்துவமும் ஜீவனைச் சார்ந்ததாகும். ஜீவனின் பிரகாசத்தைக் குறிப்பதே தமிழின் இடையின எழுத்துக்கள். வந்த வேதமாகிய ஆசான் அறம் செய்யும் வரம் தந்து ஐந்தெழுத்து மந்திரமாகிய சொந்த வீட்டில் நம்மை குடியேற்றுகிறார். இலக்கம் எனும் சொல் குறிக்கும் எண் - இரண்டு என்பதாக, உகாரமெனும் எழுதாத எழுத்தாக, திருத்தலம் எனும் இலக்காகவும் உள்ளது. இறைவன் இருக்கும் இலக்கை அடைய செயல் உள்ள வழிகாட்டும் அவையே எம் ஆதி மார்க்க னீதி அவை என்ற குருபிரானின் அருளமுதுடன் ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

24-11-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் பொற்பாதம் போற்றி வள்ளல் பிரான் அருளிய **திருக்கதவம் திறவாயோ திரைகளெலாம் தவிர்த்தே...** என்ற அருட்பா பாடலுடன் அவை இனிதே உதயமானது.

குருபிரான் அருளமுதம்:

உடல் ஆரோக்கியத்திற்கு அறுசுவை உணவும், உள்ளத்தின் ஆரோக்கியத்திற்கு செவிச்சுவை உணவும் அவசியம். சிவானுபவத்தின் மூலமே அவரவரும் தன்னை பிரகாசிக்கச் செய்யும் வெளிச்சப் பொருளையும், பொய்யினுள் இருக்கும் மெய்யையும் அறிய முடியும். ஏகாட்சர பிரகாச பூரணப்பொருள், 24 மற்றும் 5 அட்சரங்களாக இருப்பதை அறிந்தவரே பூரணர். ஐவனமெனும் வர்ணமே சர்வ மதங்களின் மூலமந்திரச் சாவியாகும். பாண்டுரங்கன் எனும் அரசனுக்கு அரசனான கோவேந்தனே குருவாக வந்து ஞான சம்பந்தம் அருள்கிறார்கள்.

Copyright © AMNA Trust, Chennai

ஜீவசகோதரர் சங்கர்: வேத சாட்சியாக பெரியோர்கள் அருளும் சிவானுபவத்தை நாமும் அனுபவிப்பதே பேரின்பம். மனுவின் என் சாண் உடலுக்கு பிரதானமாக விளங்கும் சிரசினுள் இருக்கும் நான்கு தேக ரகசியமும், ஆறு ஆதாரமும் தோற்றமற்ற ஒன்றே. புலன்வழி பற்றி, புறத்தில் அலையும் மனதை அகமுகத்தில் நிலை நிறுத்துவதே மனோவசியம். ஆசான் அருளால் அறிவை அறிந்து அனித்தியத்தை விட்டு நித்தியத்தின் நிஜம் அறிந்து, மரணத்தை வெல்லும் மாமருந்தைப் பெற்ற மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள், என்ற பகிர்வுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

24-11-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
தொகுப்பு: ஸ்ரீமதி. விஜயசித்ரா

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மோதய மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதங்கள் பணிந்து **தத்துவம் கடந்ந தயானிதிக் கடலே...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் குருபிரான் முன்னிலையில் அவை மலர்ந்தது.

குருபிரான் அருளமுதம்: தத்துவத்தின் முதற் பொருளான மனித உடல் கடந்து, உயிர்வழி பற்றி, ஆத்ம வீடு அடைந்து, எட்டாவது நிலையில் இருக்கும் நீதியெனும் பொருளான இறைவனைக் காண்பதே பிரம்மவித்தை. உலக காரியம் யாவற்றிற்கும் இசையும் மனம், தன்னை அறியும் தவச் செயலுக்கு இணங்காத நிலையை மாற்றி, இணங்க வைக்கும் செயலே தவம்.

ஜீவசகோதரி பவித்ரா: இருளகற்றும் சந்திர சூரியன் போல், நம் அறியாமை இருளகற்றும் ஆசானின் சொல்லக விளக்கே ஜோதியாகும். உயிர்களின் தோற்றமும் மறைவும் உண்டாக்கும் இருளும் ஒளியும் போல், பிறவி இருள் நீக்கி பிரகாச உலகில் ஆக்குவது ஞான சூரியனாக வரும் குரு எனும் இரண்டெழுத்து மந்திரமே.

ஜீவசகோதரி பிரபா: எழுவகைத் தோற்றத்தில் இல்லாத னரனை மனுவாக்கி, தேவனாக்கும் குருவே குல தெய்வம். ஆன்மப் பிரகாசத்தை மறைக்கும் மாயத்திரை அகற்றி, இறைவனடி சேர, எண்ணம்-சொல்-செயல் மூன்றாலும் நன்மையே செய்ய வேண்டும். விதியெழுத்தை மதி எழுத்தாக மாற்றி பிறவாமையில் ஆக்கும் ஆசானின் நாத மருந்தே நல்ல மருந்து.

ஜீவசகோதரர் காளிராஜன்: தலையான தலையும் அந்தமுள பிரணவமும் அறிய வைத்து உணர்ச்சி கடந்த உணர்வை உணர வைத்து சாத்வீக குணத்தில் நம்மை புகுத்தாட்டுவது குருவின் திருவருளே.

ஜீவசகோதரர் கோபிநாத்: நாம் என்பது இவ்வுடல் அல்ல என அறியச் செய்து, வாயில் சொல்லும் பலனற்ற மந்திரத்தை பலன் தரும் பிரகாசப் பொருளாக தரிசிக்கச் செய்வது குருபிரானின் பெருங்கருணை பேரிரக்கமே.

ஜீவசகோதரர் ஆனமலையான்: அவரவரின் அகமியத்தில் விளங்கும் சொந்த நாட்டில் குடியேற வழிகாட்டும் குருவின் நாதமே போதம்.

ஜீவசகோதரர் செல்வம்: சாலை ஆண்டவர்கள் அருளிய தெய்வத் தேடு கூடகத்தில் வரும் தேடு கூடகர்கள், பிரம்ம கூடகர்களாக மாறும் நிலையை, குருபிரான் அருளும் ஆறாம் அறிவு கொண்டே அறிய முடியும். அழி தலையை அழியாத் தலையாக மாற்றி, நாதத்தால் ஆதம் பாதமும் அறியச்செய்து, வேதம் விளங்கவைத்த குருகொண்டல் இருக்கும் இடமே குருஷேத்திரம்.

குருபிரான் அருளமுதம்: பேசரும் பெரும் பொருளைப் பேசரும் வாசகங் கொண்டு பேசும் பெருமானின் திருவாக்கை உணர்ந்த மக்களின் அனுபவமே சிவானுபவம். நீ, நான் என்றிலா அத்வைத நிலையில் ஒருவனை ஆக்கும் வித்திலா வித்தின் மூலம், தன்னை அறியும் போதே, வித்தும், விளை நிலமும், விளை பொருளும் இன்னதென அறியமுடியும். சொல்லிய பாட்டின்

Copyright © AMNA Trust, Chennai

பொருள் உணர்ந்த செல்வர் சிவபுரத்தில் உள்ளார் என சிவபுராணத்தில் அருளியுள்ளபடி, நீதி எனும் பொருள் ஆனவர்க்கே இவ்வுலகம் கடந்த அவ்வுலகம் விடியும். இருளற்ற மொழி இயம்பும் இயல் மொழி அண்ணல் அருளால் அருளும் சிவாகமம் அறிகின்ற அறிவே அறிவு, என்ற அருள் வர்ஷிப்புடனும் பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.

29-11-2024 ~ வெள்ளிக்கிழமை
மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா - அவதாரத் திருநாள் சிறப்பு அவை
தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மோதய மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் பணிந்து ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

குருபிரான் அருளமுதம்: மெய்வழி சாலை ஆண்டவர்களின் திருவடி நிழல் படிந்து மெய்ஞானம் பெற்ற மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்களின் திருமுன்பாக, 29 வருட காலம் பழகித் தேர்ந்த மெய்யை அவர்களின் உத்தரவின் படியே, நாம் ஆதி மார்க்க னீதி அவையின் மூலமாக எதார்த்த உள்ளம் கொண்ட மக்களுக்கு வழங்கி வருகிறோம். மிக உயர்ந்த தத்துவமாகிய மனித முகத்தையும், மெய்ஞானிகளின் அடையாளத்தையும் அவர்களின் தொனியின் மூலமே நாம் உணர முடியும். நற்றாளை காண வைக்கும் கல்வியை பழகித் தேர்ந்து அறிவுக்கண் கொண்டு அழியா உலகைக் காண்பதே நின்றதொரு பிரளயத்தின் அதிசயமாகும்.

மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா அருளிய, முருகப் பெருமானின் யோக ஞானத்திற்கான முன்னுரை, மெய்வழி ஆண்டவர்களிடம் அவர்கள் பெற்ற மெய் ஞானத்தின் ஒரு சான்றாகும். மேலும் சன்மார்க்கத்தை சார்ந்தோர் வியக்கும் வண்ணம், அவர்கள் பகர்ந்தது யாதெனில், வள்ளலார் தன் குருவின் மூலமாக பெற்ற நுதற்கண் பற்றியும், சன்மார்க்கத்தின் முடிவு சாகாத கல்வியே, சாகாதவனே சன்மார்க்கி என அருட்பாவிலும், **உற்ற மொழி உரைக்கின்றேன் ஒருமையினால் உமக்கே... என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கம் தானே** என ஞானசரியை 26ஆம் பாடலில் அருளியதுமாகும்.

திருமெய்ஞ் ஞானக் கொரல் – வாக்கியம் 5 தொடர்ச்சி - குருபிரான் அருளமுதம்:

பேசரும் பெரும் பொருளை பேரிரக்கம் கொண்டு விளக்கி அருளும் அண்ணல் அறைந்த அறிவு அறியாவிடில் எண்ணிலா எழுத்தும் நீர் மேல் எழுத்தேயாம். விதி எழுத்தை மதி எழுத்தாக மாற்ற அவர்கள் அருள்வதே பிரணவக் கலை. பிறப்பு இறப்பின் காரணமான வினையெனும் நமனை வெல்லும் பிரம்மவித்தை கைக்கொண்ட தேசிகரே நம் மனக் கவலை மாற்ற வல்லவர். **மாயும் முன்னே மாய்ந்து கலை பாய்ந்நவர்கள் பகர்வது உண்மை யுண்மையே** என்ற ஆண்டவர்களின் திருவாக்கின் படி, அவரவரின் அறிவை அறியும்போதே அவதாரம் நிகழ்கிறது.

ஜீவசகோதரர் விஜயகுமார்: **சத்திய வேதம் - வாக்கியம்: ஹீப்ரு: 10:16,17,19,21 யோகோபு 1:25**

கர்த்தர், சீடனின் இதயத்தில் மூன்றாம் கண் திறந்து, ஆறாம் அறிவை அறிவித்து தன் பிரமாணங்களை அறியச் செய்கிறார். நரனாக பிறந்த ஒருவனின் பாவம் நீக்கி, மனிதனாக மாற்றி, ஒரு மொழியாம் குருமொழி மெய்ப்பால் மூலம் அனித்திய தேகம் விலக்கி நித்திய ஜீவனில் குடியேற்றி வைக்கிறார். அன்பர்களின் அகங்குளிர பண்ணார மணி உண்டைப் பெட்டகமாம் பூரணத்தை இதயத் தோற்றமாக நிலைக்கச் செய்கிறார் என்ற பகிர்வுடனும் பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

சத்து அசத்துக்களைப் பிரித்தறியும் பிரம்ம ஞான சிரேஷ்டராகிய அவரே சாக்ஷாத் சற்குரு. அவர் எவ்விடத்தும் இரவும் பகலும் பரமாத்ம சொரூபத்தில் ஐக்கியமாகி இருக்கின்றார். அத்தகைய சற்குரு புழங்கும் எல்லைகள் யாவும் பவித்திரம், அதாவது தூய்மையானவையாம்.

~ குரு கீதை

Copyright © AMNA Trust, Chennai

இசை வகுப்பு
தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்

03-11-2024 ~ ஞாயிற்றுக்கிழமை

பரிசுத்த ஆவித் தெய்வம் சாலை ஆண்டவர்கள் அருளிய **ஆறிரு சமயத்திற்கும்...** என்ற பாடலுடன் அவை மலர்ந்தது. தெய்வத்தேடு கூடகத்தில் உள்ள **கோலெடுத்தா தம்பியோ அந்த கோலெடுத்தாடா தம்பி...** என்ற பாடல் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

10-11-2024 ~ ஞாயிற்றுக்கிழமை

பரிசுத்த ஆவித் தெய்வம் சாலை ஆண்டவர்கள் அருளிய **இணங்கிய சுபாவம் பார்த்து...** என்ற பாடல் நாதநாமக்ரியா ராகத்தில் பாடப் பெற்று அவை மலர்ந்தது. தொடர்ந்து, தெய்வத்தேடு கூடகத்தில் உள்ள **கோலெடுத்தா தம்பியோ அந்த கோலெடுத்தாடா தம்பி...** என்ற பாடல் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

24-11-2024 ~ ஞாயிற்றுக்கிழமை

ஞான சூரியன் ஸ்ரீலஸ்ரீ சாலை யுகவான் அவர்கள் அருளிய தெய்வப் பாடல்கள் திரட்சியிலிருந்து **ஜீவ கங்காவின் வான் பொதிகை தென்றல்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. சாலை ஆண்டவர்கள் அருளிய **ஆடலங்ஙன்னி** பாடல்கள் மோகன ராகத்தில் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

குரு வா ஆழ்க! குருவே துணை!

Copyright © AMNA Trust, Chennai

நவம்பர் 2024 மாதம் நடைபெற்ற அவை நிகழ்வுகள்

07-11-2024 ~ வியாழக்கிழமை

குருபிரான் **சாலை இரவி அப்பா** அவர்கள் முன்னிலையில் ஜீவதம்பதியர் செந்தில் - சண்முகப்பிரியா (சிவகாசி) இவர்களின் திருவளர்ச்செல்வி **மகாலட்சுமி என்ற மகிமா - ராம் நாராயணன்** இவர்களின் திருமணம் சிவகாசியில் நடைபெற்றது.

குருபிரான் **சாலை இரவி அப்பா** அவர்கள் ஆசீர்பாதத்துடன் ஜீவதம்பதியர் சுந்தர் - பொம்மி, (பிரம்மதேசம்) இவர்களின் திருவளர்ச்செல்வி **S. ஜான்சி - கிரண்குமார்** இவர்களின் திருமணம் வாலாஜாபேட்டை, பாலாஜி மஹாலில் நடைபெற்றது.

Copyright © AMNA Trust, Chennai

ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

நாள்/ இடம்	னிகழ்வுகள்
29-12-2024 / சென்னை	01-01-2025 புதன்கிழமை புத்தாண்டுப் பிறப்பை முன்னிட்டு, குருபிரான் **சாலை இரவி அப்பா** அவர்கள் முன்னிலையில் சென்னை, அண்ணாநகர் - Sea Shell Restaurant-ல் சிறப்பு அவை நடைபெற இருக்கிறது.
14-01-2025 / சிவகாசி	குருபிரான் **சாலை இரவி அப்பா** அவர்கள் முன்னிலையில் தைத்திங்கள் பொங்கல் திருவிழா நடைபெற இருக்கிறது.

Copyright © AMNA Trust, Chennai

குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2024 நவம்பர் மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 76

அனைவருக்கும் நன்றி !!!

AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்ங ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

Account Name: Aathi Margha Neethi Avai
Account Number: 50200047470073
IFSC: HDFC0000323
Branch: Mylapore

Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

Published by:
AMNA TRUST (Registration No. 163/2019)
13/2, Hyder Garden 2nd Street, Otteri ,
Chennai – 600012

www.amnatrust.org

Contact Us:

Email: write2amnatrust@gmail.com

YouTube Channel: https://youtube.com/c/amnatrust/

Facebook Page: https://www.facebook.com/amnatrust/

***பின்குறிப்பு**: இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

The Editorial Team:

Shri. Sankar, Sivakasi
Shri. Venkatesa Muthu, Chennai
Shri. Vadivelan, Chennai
Shri. Manimaran, Chennai
Shri. Thiyagarajan, Chennai
Shri. Chiranjeevi, Chennai

Issue 41 – Month: December 2024

Copyright © AMNA Trust, Chennai